# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:54** **தேதி:02.08.2015**

**BSNL வளர்ச்சிக்கான FORUM - நிர்வாகம் கூட்டம்**

அன்பார்ந்த தோழர்களே,

24.7.2015 அன்று, CMD BSNL தலைமையில், அனைத்து ஊழியர்-அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பான FORUM தலைவர்களும், நிர்வாக அதிகாரிகளும் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.

கூட்டமைப்பின் கன்வீனர் தோழர் P. அபிமன்யூ, AIBSNLEA பொதுச் செயலர் தோழர். பிரகலாத் ராய், SNEA பொதுச் செயலர் தோழர். K.S. செபஸ்தியான் ஆகியோரும்,

நிர்வாக தரப்பில் DIR (CFA), SR.GM(NWO-CFA), SR.GM(NOW-CM), GM(PP/S&M-CM) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**<u>கூட்டத்தின் முக்கிய அம்சங்களாவன</u>** :

- தரைவழி இணைப்புகளுக்கு இலவச இரவு நேர அழைப்பு வசதியும், மொபைல் இணைப்புகளுக்கு இலவச ரோமிங் வசதியும் அளிக்கப் பட்டதன் மூலம் .BSNL நிறுவனம் செய்திகளில் இடம் பெற்றுள்ளது.
- ஏர்டெல், வோடஃபோன் போன்ற போட்டியாளர்களின் மத்தியில், .BSNL -இன் சேவைத்தரத்தில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**<u>உடனடியாக ஒன்றுபட்டு உழைத்து நிறுவனத்தின் புத்தாக்கத்தை நிலைநாட்ட வேண்டிய தருணம் இது.</u>**

- கருவிகள்/கேபிள்/ட்ராப் வயர் தட்டுப்பாடு மற்றும் கேபிள் பழுது ஆகியவற்றைக் களைய, மாவட்ட மாநில நிர்வாகங்கள் FORUM தலைவர்களுடன் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி, விவாதித்து, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என CMD வலியுறுத்தியுள்ளார்.
- துண்டிக்கப் பட்ட இணைப்புகளை மீண்டும் கொண்டு வர வாடிக்கையாளர்களுடன் பேசும் வசதி (Incoming facility) மேலும் ஒரு மாதத்திற்கு (ஆகஸ்ட் வரை ) நீடிக்கப் படுகிறது. மோடம் தற்போது ரூ. 1500- க்கு விற்கப் படுகிறது.
- தமிழ்நாட்டில் FORUM மூலமாக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்றும், குறிப்பாக நாகர்கோவில் மாவட்டம் சிறப்பாக செயல்பட்டு இணைப்புகள் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளன என்றும் கன்வீனர் தோழர். P. அபிமன்யூ பதிவு செய்துள்ளார்.
- 2015 ஜூன் மாதத்தில் மொத்த தொலைபேசி எண்ணிக்கையும், MNP எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. அனைத்து மாநிலங்களிலும் மே மாதத்தில் 8.6 லட்சம் கூடுதல் மொபைல் இணைப்புகள் வழங்கப் பட்டன. ஜூன் மாதம் 11.6 லட்சம் கூடுதல் மொபைல் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன. இது 36% கூடுதல் வளர்ச்சியாகும். ஜூலையில் 15 லட்சம் கூடுதல் இணைப்புக வழங்கப் பட்டிருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அவ்வாறு உயர்ந்தால் அது 25% வளர்ச்சியாகும். வரும் மாதங்களில் மாதாந்திர வளர்ச்சியை 30 லட்சமாக உயர்த்துவது நமது இலக்கு.

- 2015 மே மாதத்தில் MNP - PORT OUT : PORT IN விகிதாச்சாரம் 2.11 ஆக இருந்தது, ஜூன் மாதத்தில் 1.35 ஆக குறைந்துள்ளது. ஜூலையில் PORT OUT-ஐக் காட்டிலும், PORT IN அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தொலைபேசி இணைப்பு துண்டிப்பு 1.20 லட்சத்திலிருந்து 40-45- ஆகக் குறைந்துள்ளது. இது மேலும் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- அந்தமான் -நிக்கோபர், அசாம், சென்னை TD, ஹரியானா, ஜார்கண்ட், ஜம்மு -காஷ்மீர், வடகிழக்கு-1, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய 10 மாநிலங்களில் சாதகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது அனைத்து மாநிலங்களிலும் ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

குறிப்பாக தரைவழி இணைப்புகளில் பெரும் வளர்ச்சியை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என CMD கேட்டுக் கொண்டார். இத்தகைய கூட்டத்தை நடத்தியதற்காக FORUM தலைவர்கள் CMD -க்கு நன்றி தெரிவித்தனர்.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**